# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 84/பேரூ/2024**
**நாள் : 28.11.2024**

திரு. மு. தினேஷ்,
மணலூர் பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மணலூர் பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தாலுக்கா, மணலூர்பேட்டை அஞ்சல், சேணியர் வீதி, எண். 18 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. தினேஷ் என்பவரின் 22.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.11.2023 அன்று பெறப்பட்டு, 84/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தாலுக்கா, மணலூர்பேட்டை அஞ்சல், சேணியர் வீதி, எண். 18 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. தினேஷ், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

(i) மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.70/8ல் உள்ள அரசுக்கு சொந்தமான புளியமரம் மற்றும் இலுப்பை மரங்களின் கிளைகள் தங்களது பட்டா நிலத்தில் படர்ந்துள்ளதால் மகசூல் பாதிக்கப்படுவதாக புகார் தெரிவித்து, அதனை அகற்றிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மற்றும்

(ii) ஜம்பை சாலையில் மழைநீர் வடிகால் அமைக்க கோரியுள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணலூர் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) மணலூர் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 29.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

மனுதாரர் திரு. மு. தினேஷ் என்பவரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்.70/8ல் மரக்கிளைகளை அப்புறப்படுத்துவது தொடர்பாக ஏற்கனவே மனுதாரரிடம் முறையீட்டு மனு பெறப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் உரிய ஆணை வெளியிடப்பட்டது (ஆணை எண்.240/பேரூ/2022 நாள் 01.02.2023). இவ்வாணையை மறைத்து மனுதாரர் மீண்டும் அதே புகாரினை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரின் மற்றொரு கோரிக்கையான ஜம்பை சாலையில் மழைநீர் வடிகால் அமைப்பது குறித்து இப்பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றி பின்னர் அரசிடமிருந்து உரிய நிதியினை பெறும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரின் புகார் மனு, மணலூர் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரரின் பட்டா நிலத்தில் பேரூராட்சிக்கு சொந்தமான புல எண்.70/8 ல் உள்ள மரங்களின் கிளைகள் படர்வது குறித்து, ஏற்கனவே மனுதாரர் திரு. மு. தினேஷ் என்பவர் தனது 25.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்து அது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் 01.02.2023 நாளிட்ட உரிய ஆணை வெளியிடப்பட்டு (ஆணை எண்.240/பேரூ/2022), ஆணையினை மனுதாரர் திரு. மு. தினேஷ் என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் மனுதாரர் ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தால் வெளியிடப்பட்ட ஆணை குறித்து தனது 22.11.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஏதும் தெரிவிக்கவில்லை.

மனுதாரரின் மற்றொரு கோரிக்கையான ஜம்பை சாலையில் மழைநீர் வடிகால் அமைப்பது தொடர்பாக அரசிடம் உரிய நிதியினை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை செயல் அலுவலர் சமர்ப்பித்த அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது. இந்நிலையில் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. மு. தினேஷ்,
எண். 18, சேணியர் வீதி,
மணலூர்பேட்டை போஸ்ட்,
திருக்கோவிலூர் தாலுக்கா,
கள்ளக்குறிச்சி மாவட்டம் – 605 754

2. செயல் அலுவலர்,
மணலூர் பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
~~இகோ/உ~~ திரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

28/11/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032